22.06.2024 ,OS.No.284/2021,P.W. 3 – முகமது ஹனிபா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வெளிநாட்டிற்கு அடிக்கடி போய்விட்டு வருபவனா என்றால் 1994 முதல் 2004ம் ஆண்டு வரை துபாயில் இருந்தேன். அதன்பிறகு செல்லவில்லை. அதை காட்டக்கூடிய பாஸ்போர்ட் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. அகமது மீரா என்னிடம் தெரிந்ததை சொல்லுங்கள் என்று சொன்னதின்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்ய யார் தகவல் சொன்னது என்றால் அகமது மீரா வக்கீலை பார்க்க சொன்னார். நான் போய் பார்த்து தகவல் சொன்னேன். அகமது மீரா என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. என்னென்ன சொத்துக்களுக்கு என்னென்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் தெற்கு முகைதீன் ஜீம்மா பள்ளிவாசலில் செயலாளராக இருக்கிறேன். நான் சாட்சி சொல்ல வருவதற்கு பள்ளிவாசலில் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. அனுமதி பெற தேவையில்லை. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வீடு, இடங்கள் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். அதற்கு முன்பு வெளிநாட்டில் இருந்தேன். வெளிநாடு செல்வதற்கு முன்பு பீடி கம்பெனியில் வேலை பார்த்தேன். தெற்கு முகைதீன் பள்ளிவாசல் தெருவில் எவ்வளவு காலமாக குடியிருக்கிறேன் என்றால் எங்கள் பாட்டனார் காலத்தில் இருந்து அங்கு தான் குடியிருக்கிறேன். எங்கள் தெருவில் உள்ள ஜமாத்தில் சாட்சி சொல்லுவதற்கு நான் அனுமதி கேட்கவில்லை. ஜமாத்து எதற்காக வைத்துள்ளோம் என்றால் பள்ளிவாசலை நிர்வாகம் செய்வதற்காக வைத்துள்ளோம். நான் சொல்லும் ஜமாத்தில் அக்பர் தெரு, சாயல் தரகன் தெரு, தெற்கு முகைதீன் பள்ளிவாசல் தெரு ஆகியவை உள்ளது. அந்த தெருக்களில் உள்ள வீடுகளில் இருக்கும் மூத்த உறுப்பினரின் பெயரை எங்கள் ஜமாத்தி பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். ஒவ்வொரு தெருவிலும் பல கொந்துக்கள் உண்டு என்றால் சரிதான். அந்தெந்த கொந்துக்களில் உள்ள பிரச்சனைகளை அந்தெந்த கொந்துக்களில் உள்ளவர்களே பேசி தீர்த்து கொள்வார்கள்

என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ஹமீம்மை தெரியும். அவர் கழுங்கு சின்ன மீதின் தெருவில் இருந்தார். அவர் எங்கள் ஜமாத்திற்கு வந்து சுமார் 10, 20 வருடங்கள் இருக்கும். என்னை இன்று சாட்சி சொல்ல வாதியின் மருமகன் அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. இதற்கு முந்தைய வாய்தாவின் போதும் வாதியின் மருமகன் தான் அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. வாதியின் மருமகன் இன்று நீதிமன்றம் வந்துள்ளார் என்றால் சரிதான். நான் பள்ளி வாசலில் செயலாளர் பொறுப்பில் இருக்கிறேன் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. ஆதாரம் பள்ளிவாசலில் உள்ளது. வாதியின் தகப்பனாரை எனக்கு சிறு வயது முதல் தெரியும். அவர் 2008ம் ஆண்டில் இறந்தார். அவரை ஆதி முகைதீன் பள்ளிவாசலில் அடக்கம் செய்யபட்டது. நான் எனது அம்மா உடன் 1ம் பிரதிவாதி வீட்டிற்கு சென்று வருவேன் என்பதை காட்டுவதற்கு ரெக்கார்டு எதுவும் இல்லை. வாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. வாதியின் பிள்ளைகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்று தெரியும். வாதி யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய தாயார் சுமார் 2 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். என் தாயார் இறக்கும் வரை நடக்கும் நிலமையில் இருந்தார். காஜா முகைதீன் அவர் பிள்ளைகள் வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். 2007ம் ஆண்டு ஒரு மகன் பிள்ளை பேரன் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2007ம் ஆண்டில் ஒரு மகளின் மகளுக்கு சென்னையில் நடந்த திருமணத்தில் அவர் கலந்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காஜா முகைதீன் உடல் நலம் சரியில்லாமல் எவ்வளவு நாட்கள் இருந்தார் என்பதை காட்டுவதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2004ம் ஆண்டில் இருந்து உடல்நிலை அவருக்கு சரியில்லை என்று எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் நான் 2004ம் ஆண்டில் நான் வெளிநாட்டில் இருந்து வந்துவிட்டேன். அப்போது என் அம்மாவுடன் சென்று பார்த்துள்ளேன். அதனால் தெரியும். எவ்வளவு காலம் உடல்நிலை சரியில்லாமல் அவர் இருந்தார் என்றால் 2004ம் ஆண்டில் இருந்து அவர் இறக்கும் வரை அவ்வாறு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவர் 2007ம் ஆண்டில் பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்று அவருடைய பிள்ளைகளுக்கு எழுதி வைக்கப்பட்ட ஆவணத்தில்

ரேகை பிரட்டி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. உழவன் பெயர் கணேசன். அவர் எனக்கு பழக்கம் கிடையாது. நான் பார்க்க போகும்போது அவர் உடன் இருந்தார். மேற்படி கணேசன் காஜா முகைதீனை பராமரித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அந்த உழவன் தற்போதும் உயிரோடு தான் இருக்கிறார். எனக்கு அலிஅசன், வாலன் காஜா, வேல்முருகன் ஆகியோர்களை தெரியும். நான் அவர்களுடன் சேர்ந்து கட்டபஞ்சாயத்தில் ஈடுபட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். அவர் என் பாட்டிக்கு தோழி ஆவார். 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் பராமரிப்பில் இருக்கிறார். நான் கூறுவது போன்று எந்த காலத்திலும் 2 ம் பிரதிவாதி வீட்டிற்கு சென்று 1 ம் பிரதிவாதியை பார்த்தது கிடையாது என்றால் சரியல்ல. வாதி சொன்னதின் அடிப்படையில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி மீதுள்ள வெறுப்பின் காரணமாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2004 ஆண்டு முதல் 2008 ம் ஆண்டு வரை வாதியின் தகப்பனார் படுத்த படுக்கையாக இருந்து வந்தார் என்றும், அவரை உழவன் கணேசன் பார்த்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காஜா முகைதீன் பத்திர அலுவலகத்திற்கு சென்று ஆவணம் எழுதி கொடுத்த விபரம் வாதிக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு விபரங்கள் தெரியாது என்றும், நான் வாதிக்கு சார்ந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.